## சிவகங்கை மாவட்டத்தில் கவிஞர் முடியரசன் –

# மருது சகோதரர்கள் - வாளுக்கு வேலி அம்பலம் சிலைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!



**சிவகங்கை, ஜன. 22 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (22.1.2025) சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் சிவகங்கையில் அமையப்பெறும் திருவுருவச் சிலைகளுக்கு அடிக்கல் நாட்டி, சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையினைத் திறந்துவைக்கிறார்.**

முதலமைச்சர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற கடந்த மூன்றரை ஆண்டுகளில், நாட்டிற்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்ட பெருமக்களின் தியாகங்களைப் போற்றி அவர்களுடைய சிலைகளையும் மணிமண்டபங்களையும், அரங்கங்களையும் அமைத்து வருங்கால இளைஞர்கள் அறிந்து உணர்ந்து பின்பற்றும் வண்ணம் 10க்கும் மேற்பட்ட நினை வரங்கங்களையும் 36 திருவுருவச் சிலைகளையும் திறந்துவைத்துள்ளார்கள். மேலும் பல சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், தியாகிகளுக்குமான நினைவுச் சின்னங்களையும் அமைத்து வருகிறார்கள். இவை இந்தியாவிற்கே வழிகாட்டத் தக்கவையாகும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் இந்திய விடுதலைப் போரில் தங்களின் இன்னுயிரை ஈந்தும் சொத்து சுகங்களைப் பறிகொடுத்தும், பல்வேறு இன்னல்களை எதிர்கொண்ட தமிழ்நாட்டைச் சார்ந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போற்றிப் பெருமைப்படுத்துகின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் திறக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான சிலைகளும், கட்டப்பட்ட மணிமண்டபங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

**கலைஞர் ஆட்சியில்**
**மருது சகோதரர்களுக்கு சிலை!**

இந்திய விடுதலைப் போரில், சிவகங்கை மாவட்டத்தில் தோன்றிய சுதந்திரப் போராட்ட வீரர்கள் மாமன்னர்கள் மருது சகோதரர்கள், வீரமங்கை வேலுநாச்சியார், வீராங்கனை குயிலி, வாளுக்கு வேலி அம்பலம் ஆகியோரின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் திருப்பத்தூரில் மணிமண்டபத்துடன் கூடிய சிலைகள் திறந்து வைக்கப்பட்டுப் பெருமை சேர்க்கப் பட்டுள்ளது.

அந்த வகையில் வீரமங்கை வேலுநாச்சியாரின் படைத் தளபதியாக விளங்கிய வீரத்தாய் குயிலி அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், ரூ. 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 9.10.2024 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சிவகங்கைச் சீமையை ஆண்ட மாமன்னர்கள் மருது சகோதரர்களுக்கு சிவகங்கையில் சிலை அமைத்து பெருமை சேர்த்திட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அந்தக் கோரிக்கைகளை ஏற்று, முதலமைச்சர் அவர்கள், அம் மாமன்னர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சிவகங்கை மாவட்டம் காளையார் கோயிலில் உள்ள வீரமங்கை வேலுநாச்சியார் நினைவிடம் அருகில் ரூ.1 கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கும் புதிய திருவுருவச் சிலைகளுக்காக இன்று (22.1.2025) சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்ற அரசு விழாவில் அடிக்கல் நாட்டுகிறார்கள்.

**கவியரசர் முடியரசனுக்கு**
**'காரைக்குடியில் சிலை!**

வீறு கவியரசர் முடியரசன் அவர்கள் தேனி மாவட்டம் பெரியகுளம் சுப்பராயலு - சீதாலட்சுமி இணையருக்கு 1920ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாள் பிறந்தார். தனது இயற்பெயரான துரைராசுவை முடியரசன் என்று மாற்றிக் கொண்டவர். தந்தை பெரியார் அவர்களால் பகுத்தறிவுக் கவிஞன் முடியரசன் என்றும், பேரறிஞப் பெருந்தகை அண்ணா அவர்களால் திராவிட நாட்டின் வானம்பாடி கவிஞர் முடியரசன் என்றும், முத்தமிறிஞர் கலைஞர் அவர்களால் திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர் என்றும், இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று கோலோச்சுகிறது என்றால், அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம் என்றும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் வணங்கா முடியரசர் - வளையா முடியரசர் என போற்றப்பட்ட வீறு கவியரசர் முடியரசன் அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் திருவுருவச் சிலைக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்கள்.

**வாளுக்கு வேலி**
**அம்பலத்துக்குச் சிலை!**

மாமன்னர் மருது பாண்டியர்களின் உற்ற நண்பராக விளங்கிய சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்கள் தென் தமிழ்நாட்டில் கி.பி.18ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்களின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டவர். அவர் பாகனேரி என்ற சிற்றூரின் தலைவராவார். அன்றைய காலகட்டத்தில் பாகனேரி என்பது 20க்கும் மேற்பட்ட சிற்றூர்களைக் கொண்ட ஒரு பகுதியாகும். தமிழர்களின் தொன்மையான போர்க் கலைகளில் குறிப்பாக ஈட்டி எறிதல் மற்றும் வளரி உள்ளிட்ட பல போர்க் கருவிகளைத் திறம்படக் கையாள்வதிலும் வல்லவர். மருது பாண்டியர்களின் உற்ற நண்பராகவும் விளங்கியவர். வீரமங்கை வேலுநாச்சியாருடன் இணைந்து வெள்ளையர்களுக்கு எதிரான பல்வேறு போர்களைத் திறம்பட எதிர்கொண்டவர் என்று சிவகங்கை சரித்திர அம்மானையில் பக்கம் 151இல் குறிப்பிடப்படுகிறது. நேரிடையாக இவரை வெல்ல முடியாத ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி முறையில் கத்தப்பட்டு என்கின்ற ஊரில் 1801ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ஆம் நாள் கொன்றனர்.

அந்தச் சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்குவேலி அம்பலத்தின் நினைவைப் போற்றி அவருக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சிவகங்கை மாவட்டத்தில் அன்னாரின் வாரிசுகள் பெரும்பான்மையாக வசிக்கக்கூடிய நகரம்பட்டியில் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையினையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பிக்கிறார் .

---

## முரசொலி துணை ஆசிரியர்

# காஞ்சி கருணா (எ) கே.கருணாநிதி இல்ல மணவிழா!

## திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு நடத்திவைக்கிறார்!

*சென்னை, ஜன. 22 -*

*முரசொலி துணை ஆசிரியர் காஞ்சி கருணா என்கிற கே.கருணாநிதி - கே.ரமாவதி ஆகியோரின் புதல்வர் கே.திவாகர்க்கும், ஆர்.வின்செண்ட் - வி.எலிசபத் ராணி ஆகியோரின் புதல்வி இ.வி.கிறிஸ்டினாவுக்கும் மணவிழா வருகிற 24.1.2025 - வெள்ளிக்கிழமை அன்று காலை 9 மணி அளவில், சென்னை அசோக் நகர் ஜவஹர்லால் நேரு சாலை (நூறடி சாலை) யில் அமைந்துள்ள எம்.பி.கே.மகாலில் நடைபெறுகின்றது.*

*இம் மணவிழாவை திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.*

*மணவிழாவிற்கு வருகை தருவோரை கே.ராஜா, திருமதி லலிதா ராஜா ஆகியோர் வரவேற்கின்றனர்.*

**மணவிழா வரவேற்பு!**

*அதனைத் தொடர்ந்து அன்று (24.1.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நுங்கம்பாக்கம் பாம்குரோவ் ஓட்டலில் (அண்ணா மேம்பாலம் அருகில்) நடைபெறுகின்றது.*

*மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பில் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள், ஆன்றோர் - சான்றோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

---

## பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பது – பட்டப்படிப்புகளில் கற்றல் முறைகள்!

# யு.ஜி.சி.யின் வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெற வேண்டும்!

## ஒன்றிய கல்வி அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜன. 22 -**

**பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பது தொடர்பாக சமீபத்தில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (UGC) வெளியிட்ட வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் 9.1.2025 அன்று ஒருமனதாக நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலினை இணைத்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு நேற்று முன்தினம் (20-1-2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (UGC) வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் தமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தும் வகையில் இக்கடிதத்தை எழுதுவதாகவும், வரைவு நெறிமுறைகளில் உள்ள பல விதிகள் மாநிலங்களின் கல்விமுறை மற்றும் கல்விக் கொள்கைகளுக்கு முரணாக உள்ளன என்பதைத் தாம் குறிப்பிட விரும்புவ தாகவும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வரைவு யுஜிசி (இளங்கலை பட்டம் மற்றும் முதுகலை பட்டம் வழங்கு வதற்கான குறைந்தபட்ச தரநிலைகள்) - நெறிமுறைகள் 2024 தொடர்பான கவலைக்குரிய சில முக்கிய விதிகள் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**i. இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்**
**சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வு நடத்துதல்**

பொது நுழைவுத் தேர்வுகளுக்கான முன்மொழிவு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பல்வேறு கவலைகளை எழுப்பு கிறது எனக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மாநில மற்றும் தேசிய கல்வி வாரியங்களால் வலுவான இறுதித் தேர்வுகள் மூலம் மாணவர்களின் கல்வித்திறன் ஏற்கெனவே முறையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆதலால் மாணவர் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்து வது என்பது தேவையற்றதும், சுமையாகவும் அமைந்துவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நுழைவுத் தேர்வுகள் மாணவர்களிடையே கவலையை ஏற்படுத்துவதுடன் நிதிச்சுமையையும் ஏற்படுத்தி சமூகபொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நுழைவுத் தேர்வுகள் கட்டாயமாக்கப்பட்டால், பள்ளிகள் நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சியில் கவனம் செலுத்தக்கூடும், இது பள்ளிக்கல்வியின் செயல்பாட்டிற்கு இடையூறு ஏற்படுத்தும். தமிழ்நாட்டின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் (GER 47%) ஏற்கெனவே நாட்டிலேயே முதன்மையாக உள்ளது எனவே, நுழைவுத் தேர்வுகள் நிச்சயமாக பின்தங்கிய மாணவர்களின் உயர்கல்விக்கான சேர்க்கையைக் குறைத்துவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

● நாட்டிலுள்ள மாறுபட்ட கல்வி முறைகள் மற்றும் அமைப்புகளைக் கருத்தில்கொண்டு நாடு முழுவதும் ஒரே விதமான நுழைவுத் தேர்வு என்பது நடைமுறைக்கு ஒவ்வாது என்பதுடன், இது மாநில சுயாட்சியை குறைத்து மதிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

● மாணவர்கள் தங்கள் மேல்நிலைப்பள்ளி பாடப்பிரிவைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு பட்டப்படிப்பையும் தொடர அனுமதிக்கும் முறை என்பது போதுமான அடிப்படை பாட அறிவு இல்லாமல் உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்குத் தேவையற்ற கல்வி அழுத்தத்தை உருவாக்கும். எனவே, மேற்கூறிய காரணங்களுக்காக, இளங்கலை, முதுகலை சேர்க்கைகள் தனி நுழைவுத் தேர்வைவிட பள்ளி இறுதித் தேர்ச்சி மற்றும் இளங்கலை மதிப்பெண்களின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

● **ii. 4 வருட (கலை/அறிவியல்) பட்டம் பெற்றவர்கள்**

M.Tech./M.E. பட்டப்படிப்பில் சேர்க்கை பெறத் தகுதி 4 ஆண்டு கலை/அறிவியல் இளங்கலை பட்டம் பெற்ற மாணவர்களை M.Tech., அல்லது M.E., படிப்புகளைத் தொடர அனுமதிப்பது கவலையளிக்கிறது. அடிப்படை பொறியியல் குறித்த அடித்தளம் இல்லாமல், மாணவர்கள் முதுகலை பொறியியல் படிப்புகளில் சிரமப்படலாம், மேலும் இதுபோன்ற புதிய ஏற்பாட்டிற்கான தேவையைக் குறித்து கவனமாக மறு ஆய்வு செய்யவேண்டும்.

**iii. பல நுழைவு மற்றும்**
**பல வெளியேறும் அமைப்பு**

Multiple Entrance Multiple Exit (MEME) என்பதும் பல சிக்கல்களை எழுப்புகிறது, குறிப்பாக:

● கற்றல் தொடர்ச்சியில் சீர்குலைவு: தற்போதைய அமைப்பு கற்றலின் ஓட்டத்தை உறுதி செய்கிறது, அதனை MEME சீர்குலைக்கிறது.

● செயல்படுத்தலில் உள்ள சவால்கள்: பாடத்திட்டத்தில் அவ்வப்போது புதுப்பிப்புகள் ஒரு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நுழையும் மாணவர்களுக்கு கடினமாக்கும்.

● இடைநிற்றலை இயல்பாக்குதல்: MEME முறை இடைநிற்றலை சட்டப்பூர்வமாக்குவதுடன், உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்கும் முயற்சிகளை குறைக்கும்.

● கல்வி அமைப்பில் நிலையற்ற தன்மை: MEME மாதிரி கல்வி திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீட்டை சிக்கலாக்குவதன் மூலம் கல்வி நிறுவனங்களை சீர்குலைக்கக்கூடும்.

3) வரைவு யுஜிசி (பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்தல் மற்றும் பதவி உயர்வு பெறுவதற்கான குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் உயர்கல்வியின் தரங்களை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள்) நெறிமுறைகள் 2025ஐப் பொருத்தவரை, பின்வருபவை ஏற்புடையதாக இல்லை:

**i. கல்வியாளர்கள் அல்லாதவர்களை துணைவேந்தர்களாக**
**நியமித்தல் (பிரிவு 10.1)**

துணைவேந்தர்களை நியமிப்பதற்கான முன்மொழியப்பட்ட அளவுகோல்கள், தொழில்துறை, பொது நிர்வாகம் அல்லது பொதுக் கொள்கையில் அனுபவம் வாய்ந்த நபர்களை உள்ளடக்கியது மிகுந்த கவலைகளை எழுப்புகிறது. கல்வித் துறைக்கு வெளியே தலைமைப் பதவிகளில் அனுபவம் மிக்கவர்களாக இருப்பினும், துணைவேந்தர் பதவிக்கு ஆழ்ந்த கல்வி நிபுணத்துவம் மற்றும் உயர் கல்வி முறை பற்றிய புரிதல் தேவைப்படுகிறது. தற்போது முன்மொழியப்பட்டுள்ள அளவுகோல்கள் பல்கலைக்கழகங்களை திறம்பட வழிநடத்த தேவையான கல்வி மற்றும் நிர்வாக அனுபவம் இல்லாத நபர்களை நியமிக்க வழிவகுக்கும் என்று அஞ்சுகிறோம். கல்வி மற்றும் பல்கலைக்கழக நிர்வாகத்தில் அனுபவம் கொண்ட நபர்களுக்கு முன்னுரிமை அளிக்க அளவுகோல்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

**ii. துணைவேந்தர் தேடல் குழுவில்**
**மாநில அரசை நீக்குதல் (பிரிவு 10.1.iv)**

மாநில பல்கலைக்கழகங்களின் உள்கட்டமைபை மாநில அரசுகள் முழுமையாக ஏற்படுத்தியுள்ளன. இப்பல்கலைக்கழகங்கள் மாநில அரசுகளால் முழுமையாக நிதியுதவி அளிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. மாநிலத்தின் உண்மையான விருப்பங்கள், உள்ளூர் மாணவர்களின் கல்வித் தேவைகள், மாநில கொள்கைகள் ஆகியவை உரிய முறையில் பின்பற்றி உறுதி செய்வதற்கு, துணைவேந்தர்களை தேர்வு செய்யும் நடைமுறையில் மாநில அரசின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது.

**iii. மாறுபட்ட பாடப்பிரிவு ஆசிரியர்கள்** (Cross Disciplinary Teachers) **(பிரிவு 3.2 மற்றும் 3.3).**

இளங்கலை அல்லது முதுகலை தகுதியிலிருந்து வேறுபட்ட ஒரு துறையில் பி.எச்.டி பெற்ற ஒரு விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் கல்வி பின்னணியிலிருந்து வேறுபட்ட பாடத்தில் NET/SET தேர்ச்சி பெற்ற ஒருவர் அந்தத் துறையில் கற்பிக்கத் தகுதியுடையவர் என்று வரைவு விதிமுறைகள் முன்மொழி கின்றன. சரியான அடிப்படை பாடப்பிரிவு அறிவு இல்லாமல் பாடங்களை கற்பிக்க தனி நபர்களை அனுமதிப்பது மாணவர்களுக்கு, குறிப்பாக இளங்கலை மற்றும் முதுகலை மட்டங்களில் கற்றல் விளைவுகளுக்கு எதிர்மறையாக அமைந்துவிடும்.

வரைவு விதிமுறைகளில் இதுபோன்ற பல விதிகள் மாநில பல்கலைக்கழகங்களின் கல்வி ஒருமைப்பாடு, தன்னாட்சி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு கடுமையான சவால்களை ஏற்படுத்தக்கூடும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, கல்வி அமைச்சகம் விவாதத்தில் உள்ள வரைவு மசோதாக்களை திரும்பப் பெறவும், இந்தியாவில் உள்ள மாறுபட்ட உயர்கல்வி தேவைகளுடன் சிறப்பாக ஒத்துப்போகும் வகையில் வரைவு விதிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று தமது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, வரைவு நெறிமுறைகள் திரும்பப்பெறப்பட்டு, மாநிலங்களின், குறிப்பாக தமிழ்நாட்டின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்படுவதை உறுதி செய்வதற்கு ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களின் ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாகவும், இந்த வரைவு விதிமுறைகளை எதிர்த்தும், துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான விதி முறைகள் உட்பட மேற்கண்ட இரண்டு வரைவு விதிமுறைகளையும் உடனடியாக திரும்பப் பெறுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தியும் 09.01.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அத்தீர்மானத்தின் நகல் ஒன்றினையும் ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களின் கனிவான பரிசீலனைக்காகவும், சாதகமான நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைத்துள்ளதாகவும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

## மதுரையில் இன்று


# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி. மூர்த்தி - மு.மணிமாறன் அறிக்கை!

*மதுரை, ஜன. 22-*

*மதுரைக்கு வருகை தரும் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முரசு கொட்டு முழங்க, கையில் கொடியேந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாகவும், இதில் கழகத்தினர் திரளாக பங்கேற்க வேண்டுமாறும் மாவட்டச் செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.*

*அதன் விவரம் வருமாறு:-*





*கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று விட்டு சிவகங்கையிலிருந்து மதுரை வருகிறார்.*

*அவருக்கு மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விரகனூர் ரவுண்டானாவில் இன்று (22.01.2025 - புதன்கிழமை) காலை 11 மணியளவில் முரசு கொட்டு முழங்க, கையில் இரு வண்ணக் கொடி ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது.*

*எனவே இந்த சிறப்புமிக்க மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழக, மாநில கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதிகழக, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று வரவேற்பு விழாவினை சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*